www.Padasalai.Net www.TrbTnpsc.com

காலாண்டுத் தேர்வு - 2024 - 2025

வகுப்பு : 11

கணக்குப்பதிவியல்

நேரம் :3.00 மணி

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20 X 1=20)

1. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
(அ) குறிப்பேடு (ஆ) இருப்பாய்வு (இ) இருப்பு நிலைக் குறிப்பு (ஈ) பேரேடு

2. கி.பி. 1494 ஆம் ஆண்டில் ----- என்ற இத்தாலியர், இரட்டைப்பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தினார்.
(அ) கௌடில்யர் (ஆ) காரியதரிசி (இ) ஜே.ஆர். பேட்லிபாய் (ஈ) லூகா பாசியோலி

3. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
(அ) பண மதிப்பீட்டுக்கருத்து (ஆ) அடக்கவிலை கருத்து
(இ) வணிகத் தனித்தன்மை கருத்து (ஈ) இரட்டைத்தன்மைகருத்து

4. GAAP என்பது:
(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளடப்பட்டகணக்கியல் கொள்கைகள்
(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கியல் கோட்பாடுகள்
(இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கியல் வழிமுறைகள்
(ஈ) இவற்றுள் ஏதுமில்லை

5. கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது
(அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் (ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
(இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் (ஈ) முதல் = சொத்துக்கள் – பொறுப்புகள்

6. பின்வருனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார்கணக்கு எது?
(அ) கட்டடம் கணக்கு (ஆ) கொடுபடவேண்டிய சம்பளகணக்கு
(இ) மகேஷ் கணக்கு (ஈ) பாலன் நிறுவனம்

7. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
(அ) நிதி நிலைமையை அறிய (ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
(இ) நிதி நிலைமை மற்றும் இலாப-நட்டத்தை அறிய (ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

8. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
(அ) ரொக்ககணக்கு (ஆ) எடுப்புக் கணக்கு (இ) முதல் கணக்கு (ஈ) அனாமத்து கணக்கு

9. பின்வரும் எந்த முறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது
(அ) இருப்பு முறை (ஆ) மொத்தத் தொகை முறை
(இ) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை (ஈ) (அ) (ஆ) மற்றும் (இ)

10. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்தகணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
(அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் (ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
(இ) பெயரளவு கணக்குகள் மட்டும் (ஈ) அனைத்து கணக்குகளும்

11. இருப்பாய்வு தயாரிக்கும்போது, கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை 200 குறைவாக இருப்பதைக்கண்டறிந்தார். அந்த வேறுபாட்டினை அவர் என்ன செய்வார்?
(அ) அனாமத்து கணக்கில் பற்று செய்வார் (இ) ஏதேனும் பற்று இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார் (ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார் (ஈ) ஏதேனும் வரவு இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

12. மாற்றுச்சீட்டு முதிர்வு தேதி எதிர்பாரா விடுமுறை நாளாகும் போது, ---------நாள் செலுத்தற்குரிய நாளாகும்.
(அ) அன்றைய (ஆ) அடுத்து வரும் (இ) முந்தைய (ஈ) இவற்றுள் ஏதுமில்லை
13. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
(அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல் (ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
(இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் (ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்
14. ____விற்பனைத் திருப்ப ஏடு பதிவு செய்வது
(அ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது
(ஆ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது
(இ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது
(ஈ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது
15. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்
(அ) ரொக்க ஏடு (ஆ) பேரேடு (இ) உரிய குறிப்பேடு (ஈ) கொள்முதல் ஏடு
16. ரொக்க ஏடு பதிவு செய்வது
(அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் (ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்
(இ) (அ),(ஆ) ஆகிய இரண்டும் (ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்
17. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்.
(அ) சாதாரண ரொக்க ஏடு (ஆ) இருபத்தி ரொக்க ஏடு (இ) முப்பத்தி ரொக்க ஏடு (ஈ) சில்லறை ரொக்க ஏடு
18. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு
(அ) ஒரு செலவு (ஆ) ஒரு இலாபம் (இ) ஒரு சொத்து (ஈ) ஒரு பொறுப்பு
19. வங்கி அறிக்கை என்பது
(அ) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல் (ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்
(இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
(ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்
20. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹ 2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக்கட்டணம் ₹ 50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?
(அ) ₹ 1,950 வரவு இருப்பு (ஆ) ₹ 1,950 பற்று இருப்பு (இ) ₹ 2,050 பற்று இருப்பு (ஈ) ₹ 2,050 வரவு இருப்பு

## பகுதி - II

II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண்.30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

(7X2=14)

21. கணக்கியலை வரையறு.
22. நிலைத்தன்மை மரபு குறித்து சிறு குறிப்பு வரைக.
23. கணக்கை இருப்புக் கட்டுதல் என்றால் என்ன?
24. இருப்பாய்வு என்றால் என்ன?
25. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?
26. பின்வருனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.
(அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்
(ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்
27. கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்குகளின் இருப்புகளைக்கண்டறிந்து, அவை இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவு பத்தியில் இடம் பெறுமா எனக்காட்டுக.
1) பற்பல கடனாளிகள் 2) வங்கி மேல்வரைப்பற்று 3) தள்ளுபடி அளித்தது 4) இயந்திரம்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

28. செலுத்தற்குரிய நாளை கணக்கிடுக.

| மாற்றுச்சீட்டின் நாள் | தவணைக் காலம் | செலுத்தற்குரிய நாள் |
|---|---|---|
| ஜூலை 31 | 60 நாட்கள் | ? |
| ஆகஸ்ட் 5 | 6 மாதங்கள் | ? |

29. வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?

30. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 | வங்கி க/கு<br>ப<br>வங்கிக்கடன் க/கு<br>(------------------------------) | | 10,000 | 10,000 |
| 5 | எடுப்புகள் க/கு<br>ப<br>கொள்முதல் க/கு<br>(------------------------------) | | 5,000 | 5,000 |

## பகுதி - III

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண்.40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7X3=21)

31. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக.

32. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

33. எதிர்ப்பதிவை உதாரணத்துடன் விளக்குக.

34. கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப்பதிவு தந்து பேரேட்டுக் கணக்கில் எடுத்து எழுதவும். ராம் என்பவர் மே, 20, 2018 அன்று சம்பளம் கொடுத்தது₹ 15,000, மின் கட்டணம் செலுத்தியது₹ 8,000 மற்றும் கூலி கொடுத்தது₹ 2,000.

35. பின்வரும் இருப்புகளைக்கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | விற்பனை | 1,50,000 |
| வங்கிக்கடன் | 75,000 | கடனீந்தோர் | 50,000 |
| கடனாளிகள் | 1,50,000 | ரொக்கம் | 90,000 |
| சரக்கிருப்பு | 35,000 | முதல் | 1,00,000 |

36. கீழே கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கொண்டு குமார் எழுதுபொருள் நிறுவனத்தின் ஜூலை 2017 க்குரிய விற்பனை ஏட்டினை தயார்செய்க.

| | |
|---|---|
| 2017 ஜூலை 5 | சாயல்குடி, சரவணா நிறுவனத்திற்கு கடனுக்கு விற்பனைச் செய்தது<br>10 A4 தாள்கள் கட்டுகள், ஒரு கட்டு ₹ 250 வீதம்<br>10 டஜன் எழுது அட்டை, ஒரு டஜன் ₹ 850 வீதம்<br>இரண்டிற்கும் 10% தள்ளுபடி அனுமதிக்கவும் |
| ஜூலை 8 | இராஜாவிற்கு ரொக்கத்திற்கு விற்றது<br>15 A4 தாள்கள் கட்டுகள், ஒரு கட்டு ₹ 250 வீதம் |
| ஜூலை 20 | முதுகுளத்தூர், மோகனுக்கு விற்றது<br>5 வெள்ளைஅட்டைகள், ஒரு அட்டை ₹ 2,200 வீதம்<br>10 டஜன் எழுது பலகை, ஒரு டஜன் ₹ 850 வீதம் |
| ஜூலை 23 | பழைய சிற்றுந்தை நாராயணனுக்கு கடனுக்கு விற்றது₹ 5,000 |
| ஜூலை 28 | குமரனுக்கு ரொக்கத்திற்கு விற்றது 15 பெட்டி குறியீட்டு பேனா ஒரு பெட்டி ₹ 250 வீதம். |



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

37. பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேடுகளில் பதிவு செய்க.
அ) தினேஷ் என்னும் வாடிக்கையாளர் நொடிப்பு நிலை அடைந்ததால், அவர் செலுத்த வேண்டிய ₹10,000 அவருடைய சொத்துகளை விற்று ரூபாய்க்கு 40 பைசா விதம் கணக்குத் தீர்க்கப்பட்டது.
(ஆ) கடனீந்தோரான கீர்த்தனாவிற்கு ₹ 4,800 கொடுத்து ₹ 5,000 க்கான கணக்கு தீர்க்கப்பட்டது.

38. பின் வரும் நடவடிக்கைகளை எந்ததுணை ஏட்டில் பதிவு செய்யவேண்டும் என்று குறிப்பிடுக.
(அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது
(ஆ) கடனுக்கு சரக்கு விற்றது
(இ) கடனுக்கு சரக்கு வாங்கியது
(ஈ) உரிமையாளர் சரக்குகளை தனது சொந்தபயன்பாட்டிற்காக எடுத்தது.
(உ) சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு.
(ஊ) கடனுக்கு சொத்துகள் வாங்கியது

39. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக
40. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். (7 X 5 = 35)

41. (அ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க 2018 மார்ச்
1 மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் ₹ .60,000
2 ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹.10,000
3 ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹.25,000
6 கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹.15,000
8 ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது ₹.28,000
10 ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது ₹.10,000
14 கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் ₹.12,000
18 வாடகை செலுத்தியது ₹.500
25 ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹.8,000
28 சொந்தப்பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது ₹.4,000

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்து அவற்றை பேரேட்டில் எடுத்து எழுதுக.
2017 ஜூன்
1 பாசு ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 50,000
4 ரொக்கம் செலுத்தி அறைகலன் வாங்கியது ₹ 6,000
7 ஹரிஸ் என்பவரிடமிருந்து இயந்திரம் ஒன்றை கடனாக வாங்கியது ₹ 10,000
10 ரொக்கம் செலுத்தி சரக்குகள் வாங்கியது ₹ 4,000
18 காப்பீட்டு முனைமம் செலுத்தியது ₹ 100

42.(அ) பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.
2017 ஜனவரி
1 கை இருப்பு ரொக்கம் ₹ 11,200
5 இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது ₹300
7 வாடகை செலுத்தியது ₹ 30
8 ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது ₹300



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

10 மோகனுக்கு செலுத்தியது ₹700

27 அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ₹200

31 சம்பளம் கொடுத்தது ₹100

(அல்லது)

(ஆ) ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்க.

(i) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 80,000

(ii) இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 10,000

(iii) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 6,000

(iv) கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ₹ 8,000

(v) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 2,000

(vi) வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது ₹ 500

43. (அ) ரோனி என்பவர் வீணா புகைப்பட நிலையத்தின் உரிமையாளர் ஆவார். மார்ச் 31, 2018 ஆம் நாளன்று அவருடைய வணிகத்தின் ரொக்கஏட்டின் வங்கிப்பத்தி இருப்பு கட்டப்பட்டது. அது ₹ 12,000 மேல்வரைப்பற்று காட்டியது. வீணாபுகைப்பட நிலையத்தின் வங்கி அறிக்கை ₹ 5,000 வரவு இருப்பைக் காட்டியது. பின்வரும் விவரங்களைக்கொண்டு வங்கிச் சரிக்கட்டும் பட்டியலை தயார்செய்க.

(அ) வங்கி நேரடியாக வசூலித்த பங்காதாயம் ₹ 11,200 ஆனால், இது குறித்து ரொக்கஏட்டில் பதியப்படவில்லை.

(ஆ) 2018 மார்ச் 27 அன்று விடுத்த ₹ 9,000 மதிப்புள்ள காசோலை. இதில் ₹ 7,000 மதிப்புள்ள காசோலை 2018 மார்ச் 31-ஆம் நாள் வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(இ) வங்கியால் பற்று வைக்கப்பட்ட காசோலை புத்தகக்கட்டணம் ₹ 200 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

(ஈ) வங்கியில் பற்று வைக்கப்பட்ட பாதுகாப்பு பெட்டக வாடகை 1,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

(அல்லது)

(ஆ) ஆனந்த் என்பவர் ஜவுளி வியாபாரம் செய்யும் வியாபாரி. பின்வரும் நடவடிக்கைகளுக்கு ஜனவரி 2018 இல் குறிப்பேட்டினை தயாரிக்க

1 வியாபாரம் தொடங்க ரொக்கமிட்டது ₹ 70,000

2 X நிறுவனத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 30,000

3 வங்கியில் செலுத்திய ரொக்கம் ₹ 40,000

4 L நிறுவனத்திடமிருந்து கடனுக்கு கட்டடம் வாங்கியது ₹ 95,000

5 அலுவலகப்பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 5,000

6 ஆனந்தின் சொந்தப்பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 4,000

7 தொண்டு நிறுவனங்களுக்காக நன்கொடையாக துண்டுகள் வழங்கியது ₹ 3,000

8 ஆனந்த் தமது சொந்தபயன்பாட்டிற்காக சட்டைகள் எடுத்து கொண்டது ₹ 12,000

9 மாதிரிகளாக வழங்கிய சேலைகளின் மதிப்பு ₹ 3,000

10 சரக்குகள் (மேசைவிரிப்புகள்) அலுவலகப்பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டவை ₹ 200.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

44.(அ) பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்2017 , ஜூலை

1 ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு ₹ 4,000

15 ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது ₹ 2,000

18 ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது ₹ 8,000

20 ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது3,960. அவர் அளித்த தள்ளுபடி ₹ 40

25 ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது₹ 5,000.

(அல்லது)

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க .

| | |
|---|---|
| 2017<br>ஏப்ரல் 1 | காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சர க்கு வாங்கியது<br>ஒரு மீட்டர் ரூ450 விதம் 100 மீட்டர் சில்க் துணி<br>ஒரு மீட்டர் ரூ.180 விதம் 75 மீட்டர் வெல்வெட் துணி |
| ஏப்ரல் 10 | சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது<br>ஒரு மீட்டர் ரூ490 விதம் 60 மீட்டர் சில்க்துணி<br>ஒரு மீட்டர் ரூ210 விதம் 50 மீட்டர் வெல்வெட் துணி |
| ஏப்ரல் 18 | நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது<br>ஒரு மீட்டர் ரூ510 விதம் 100 மீட்டர் சில்க் துணி |
| ஏப்ரல் 20 | மதுரை , ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது<br>கட்டு ஒன்று ரூ.730 விதம் 50 கட்டுகள் காடாத் துணி<br>கட்டு ஒன்று ரூ.650 விதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி |
| ஏப்ரல் 24 | கரூர், மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது<br>சட்டைத்துணிகள் மதிப்பு ரூ. 7,000 சேலைகள் மதிப்பு ரூ.25,000 |

45. (அ)பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக்கொண்டு 31.3.2016 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் | 7,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராக்கடன் | 200 | கொள்முதல் | 45,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |

(அல்லது)



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக்கொண்டு துரைராஜ் என்பவரின் முப்பத்தி ரொக்கஏட்டைத் தயாரிக்கவும். 2017, மார்ச்

1 ரொக்க இருப்பு ₹12,000 ,வங்கி இருப்பு ₹15,000

2 ரொக்கம் வங்கியில் செலுத்தியது ₹11,000

3 சரக்கு விற்றது ₹18,500. பாதி ரொக்கமாகவும் பாதி காசோலையாகவும் பெறப்பட்டு அக்காசோலை உடனடியாக வங்கியில் செலுத்தப்பட்டது.

4 ஜெயராஜ் என்பவருக்கு கடனுக்கு விற்றது ₹7,000

8 ஜெயராஜ் காசோலை அனுப்பி தனது கணக்கு முழுவதையும் தீர்த்துக்கொண்டது ₹6,900

12 ஜெயராஜிடமிருந்து பெற்றகாசோலைவங்கியில் செலுத்தப்பட்டது

14 இக்பால் என்பவரிடமிருந்து சரக்குகள் வாங்கி அவருக்கு உடனடியாக காசோலை விடுக்கப்பட்டது. ₹ 8,500

15 முரளி என்பவரிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கப்பட்டது ₹4,000

19 கண்ணப்பனிடமிருந்து ₹ 1,975 க்கான காசோலையைப்பெற்றுக்கொண்டு ₹ 2,000-க்கான கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது.

20 சொந்த செலவுகளுக்காக ரொக்கம் எடுத்தது ₹ 3,000, காசோலை மூலம் எடுத்தது ₹5,000

25 வினோத்திற்கு ₹ 1,850 க்கு காசோலைவிடுத்து தீர்த்துக் கொண்டகணக்கு ₹ 2,000

46. (அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளை தயாரித்து சச்சின் நிறுவனத்தின் மற்றும் முகில்பேரேட்டு கணக்குகளில் எடுத்தெழுதுக.

பிப்ரவரி 1 முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹12,480

பிப்ரவரி 4 சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹15,000

பிப்ரவரி 6 மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹12,100

பிப்ரவரி 7 சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு: அதற்கு பணம் செலுத்தப்படவில்லை ₹1,200

பிப்ரவரி 9 முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது பணம் பெறப்படவில்லை ₹1,500

பிப்ரவரி 10 மணிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 13,300

பிப்ரவரி 14 முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது ₹15,200

(அல்லது)

(ஆ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

2017, ஜுலை

1 காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது ₹2,000

7 மடல்ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது ₹100

8 வெள்ளைத் தாள்கள் வாங்கியது ₹50

10 ஆட்டோரிக் ஷாகட்டணம் கொடுத்தது ₹200

15 கூலி கொடுத்தது ₹300

18 தபால் செலவுகள் செய்தது ₹100

21 எழுது பொருள்கள் வாங்கியது ₹ 450

23 தேநீர்செலவுகள் செய்தது ₹ 60

25 துரித அஞ்சல் செலவு செய்தது ₹ 150

27 சிற்றுண்டி செலவுகள் செய்தது ₹ 250

31 ஏற்றிச் செல் செலவுகள் செய்தது ₹ 150



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

47. (அ) ஆனந்த் என்பவரின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும். 2017 , டிசம்பர்

1 கைவச ரொக்கம் ₹ 19,500

4 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹ 32,000

5 காந்தியிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது ₹ 20,000

9 கோபுவிடம் பெற்றது ₹ 11,800, அவருக்கு அளித்த தள்ளுபடி ₹ 200

15 மின் கட்டணம் ரொக்கமாகச் செலுத்தியது ₹ 12,500

17 ரொக்கம் செலுத்தி கணிப்பொறி மற்றும் அதன் இதர பாகங்களை வாங்கியது ₹ 16,800

25 காந்திக்கு ₹.19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது

28 திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது ₹ 8,900, அவருக்கு அளித்த தள்ளுபடி ₹ 100

30 வியாபார செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது ₹ 3,500

(அல்லது)

(ஆ) கீழ்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31-ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக்கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| (i) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | 500 |
| (ii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது | 1,000 |
| (iii) வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி | 100 |
| (iv) நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை | 200 |
| (v) ரொக்க ஏட்டின் படி இருப்பு | 300 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

**+1 கணக்குப்பதிவியல் காலாண்டுத்தேர்வு செப்- 24**

**சரியான விடை 20X1=20**

1. (இ) இருப்புநிலைக் குறிப்பு
2. (ஈ) லூக்கா பாசியோலி
3. (இ) வணிகத்தன்மை கருத்து
4. (ஆ)பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
5. (இ) பொறுப்புகள்= சொத்துக்கள்+முதல்
6. (ஆ) கொடுபட வேண்டிய சம்பள க/கு
7. (ஈ) ஒவ்வொரு பேரேட்டு கணக்கின் இருப்பை அறிய
8. (இ) முதல் கணக்கு
9. (ஈ) அ ஆ மற்றும் இ
10. (ஈ) அனைத்து கணக்குகளும்
11. (ஆ) அநாமத்து கணக்கில் வரவு செய்வார்
12. (இ) முந்தைய
13. (இ) அனைத்து சரக்குகளின் கடன்கொள்முதல்
14. (ஆ) வாடிக்கையாளர் திருப்பிய சரக்கிற்கு உடனடியாக பணம் செலுத்தாதது
15. (இ) உரிய குறிப்பேடு
16. (இ) அ ஆ ஆகிய இரண்டும்
17. (இ) முப்பத்தி ரொக்க ஏடு
18. (இ) ஒரு சொத்து
19. (இ)வங்கிபுத்தகத்தில் வாடிக்கையாளரின் நகல்
20. (அ) ரூ 1950 வரவு இருப்பு

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. கணக்கியலைவரையறு** அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவீட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன் மூலம் தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது."

**22. நிலைத்தன்மை மரபு**

கணக்கியல் கொள்கையும், நடைமுறைகளும் தொடர்ச்சியாக ஒரு கணக்காண்டிலிருந்து மற்றொரு கணக்காண்டிற்கும் பின்பற்றப்படும் என்பதை இம்மரபு தெரிவிக்கிறது. ஒரே விதமான கணக்கியல் கொள்கைகள் பின்பற்றப்பட்டால்தான் வெவ்வேறு ஆண்டுகளின் முடிவுகளை ஒப்பீடு செய்யமுடியும். உதாரணமாக, ஒரு நிறுவனம், நிலைச்சொத்து வாங்கியதிலிருந்தே நேர்க்கோட்டு தேய்மான முறையைப் பின்பற்றினால், தொடர்ச்சியாக அதையே பின்பற்ற வேண்டும்.

**23. கணக்கை இருப்புக் கட்டுதல்:** இருப்புக் கட்டுதல் என்பது பற்றுப் பக்கத்தில் உள்ள தொகையை கூட்டி வரவு பக்கத்தில் உள்ள தொகையை கூட்டி அவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசத் தொகையை குறைவாக மொத்தம் கொண்ட தொகைப் பத்தியில் இருப்பு கீ/இ என்று எழுதுவது ஆகும். அப்போது தான் பற்று மற்றும் வரவு ஆகிய இரு பக்கங்களிலும் உள்ள மொத்தத் தொகை சமமாகும்.

**24. இருப்பாய்வு** என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்து பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கைஆகும்.

**25. ரொக்க ஏட்டின் வகைகள்:** தனிப் பத்தி ரொக்க ஏடு (ரொக்கப்பத்தி மட்டும்)

ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு (இரு பத்திரொக்க ஏடு)

ரொக்கம், தள்ளுபடி மற்றும் வங்கிப் பத்திகளுடைய ரொக்க ஏடு (முப்பத்திரொக்க ஏடு)

சில்லறை ரொக்க ஏடு

**26. பின் வருவனவற்றிற்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.**

அ. சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்: **கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது**

ஆ. ஒருசொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்: **ரொக்கத்திற்கு இயந்திரம் வாங்கியது.**

| 27. பற்று இருப்புகள் | வரவு இருப்புகள் |
|---|---|
| பற்பல கடனாளிகள் | வங்கி மே பற்று |
| தள்ளுபடி அளித்தது | |
| இயந்திரம் | |

| 28. மாற்றுசீட்டின் நாள் | தவணைகாலம் | செலுத்த வே நாள் |
|---|---|---|
| ஜீலை 31 | 60 நாட்கள் | **அக் 1** |
| ஆகஸ்ட் 5 | 6 மாதங்கள் | **பிப்ரவரி 8** |

**29. வங்கிச் சரிகட்டும் பட்டியல்:** ரொக்க ஏட்டில் செய்யப்படக் கூடிய ஒவ்வொரு பதிவிற்கும், வங்கியரால் பராமரிக்கப்படக்கூடிய செல்லேட்டில் சரிநிகர் பதிவு இருக்க வேண்டும். அதே போன்று வங்கிச் செல்லேட்டில் உள்ள ஒவ்வொரு பதிவிற்கும் சரிநிகர் பதிவு ரொக்கஏட்டில் இருக்கவேண்டும். வங்கி இருப்பு இரு ஏடுகளிலும் ஒரே தொகையினைக் காண்பிக்கவேண்டும். இரண்டு இருப்புகளும் வெவ்வேறாக இருந்தால், அதற்கான காரணங்களை விளக்குவதற்காக தயாரிக்கப்படும் அறிக்கையே வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.

**30. வங்கிக் கடன்** பெற்றது ரூ 10000

**சொந்த தேவைக்காக** எடுத்த சரக்கு ரூ 5000

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. கணக்கியலின் முக்கியத்துவம்:**

**1.முறையான பதிவேடுகள்:-** அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும் பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப்படுகின்றன.

**2.நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல்:-** வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலத்தில் தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் இயக்கமுடிவுகளையும், நிதிநிலையையும் அறியமுடியும்.

**3.வளர்ச்சியை மதிப்பிடல்:-** நிதிசார் விவரங்களைப் பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்வு செய்வதன்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மூலமாக பல்வேறு செயல்களின் வளர்ச்சியை மதிப்பிடவும் பலவீனங்களைக் கண்டறியவும் இயலும்.

| 32. அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| பதிவுசெய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும். | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணையேடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை இதில் எடுத்தெழுதப்படும். |
| பதிவுசெய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும். |
| பதிவுசெய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின்படி பதிவு செய்யப்படுகிறது. | கணக்குகளை வரிசைப்படி பதிவுகள் செய்யப்படுகின்றன. |

**33. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.**

ஒரு நடவடிக்கையில் ரொக்கம் மற்றும் வங்கி என்ற இரு கணக்குகளும் தொடர்பு பெற்றிருந்தால் அந் நடவடிக்கையின் இரு தன்மைகளும் ரொக்கஏட்டில் பதியப்படுகின்றன. அவ்வாறு ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் ரொக்கஏட்டில் பதியப்பட்டால் அது எதிர்பதிவு எனப்படும்.

**உதாரணம்:-** வங்கியில் பணம் செலுத்தியது:- இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் பதியப்படும்.

**34.** **ராம் குறிப்பேட்டுப்பதிவுகள்**

| நாள் | விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 2018 மே 20 | சம்பள க/கு | ப | 15000 | |
| | மின்கட்டண க/கு | ப | 8000 | |
| | கூலி க/கு | ப | 2000 | |
| | ரொக்க க/கு | | | 25000 |

**சம்பளக் கணக்கு**

| நாள் | விவரம் | தொ | ந | வி | தொ |
|---|---|---|---|---|---|
| 18 மே20 | ரொக்க க/கு | 15000 | | | |

**மின்கட்டணக் கணக்கு**

| நாள் | விவரம் | தொ | ந | வி | தொ |
|---|---|---|---|---|---|
| 18 மே20 | ரொக்க க/கு | 8000 | | | |

**கூலி கணக்கு**

| நாள் | விவரம் | தொ | ந | வி | தொ |
|---|---|---|---|---|---|
| 18 மே20 | ரொக்க க/கு | 2000 | | | |

**ரொக்கக்கணக்கு**

| நாள் | விவ் | தொ | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | 18மே 20 | சம்பள க/கு | 15000 |
| | | | | மின்கட்டண க/கு | 8000 |
| | | | | கூலி க/கு | 2000 |

**35.** **இருப்பாய்வு**

| வ.எ | கணக்கின் பெயர் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 1 | கொள்முதல் | 100000 | |
| 2 | வங்கிக்கடன் | | 75000 |
| 3 | கடனாளி | 150000 | |
| 4 | சரக்கிருப்பு | 35000 | |
| 5 | விற்பனை | | 150000 |
| 6 | கடனீந்தோர் | | 50000 |
| 7 | ரொக்கம் | 9000 | |
| 8 | முதல் | | 100000 |
| | **மொத்தம்** | **375000** | **375000** |

**36. குமார் எழுது பொருள் விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 | **சரவணா நிறுவனம்** | | |
| ஜீ5 | 10 A4தாள்கள் 1கட்டு 50 வீதம் | 2500 | |
| | 10டஜன்எழுதுஅட்டைகள்1 850வீ | 8500 | |
| | | 11000 | |
| | கழி:- வியாபாரத் தள்ளுபடி | 1100 | **9900** |
| **20** | **மோகன்** | | |
| | 5வெள்ளை அட்டை 1 2200 வீ | 11000 | |
| | 10டஜன் எழுதுபலகை 1 850 வீ | 8500 | **19500** |
| | **விற்பனை** | | **29400** |

**விற்பனை கணக்கு**

| நாள் | விவரம் | தொ | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | ஜீ 31 | விற்பனை க/கு | 29400 |

**சரவணா நிறுவனக் கணக்கு**

| நாள் | விவரம் | தொகை | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| ஜீ 5 | விற்பனை க/கு | 9900 | | | |

**மோகன் கணக்கு**

| நாள் | விவரம் | தொகை | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| ஜீ 20 | விற்பனைக/கு | 19500 | | | |

**37.**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | ரொக்க க/கு ப | 4000 | |
| | வாராகடன் க/கு ப. | 6000 | |
| | தினேஷ் க/கு | | 10000 |
| | **நொடிப்பு நிலையில் ரொக்கம் பெற்று கணக்கை தீர்த்தது** | | |

**38. பின்வரும் நடவடிக்கைகள் எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.**

ரொக்கத்திற்கு சரக்கு விற்றது - **ரொக்க ஏட்டில்**

கடனுக்கு சரக்கு விற்றது.- **விற்பனை ஏட்டில்**

கடனுக்கு சரக்கு வாங்கியது. **கொள்முதல் ஏட்டில்**

உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.- **உரிய குறிப்பேட்டில் / பொதுக் குறிப்பேட்டில் -**

சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு. **கொள்முதல் திருப்ப ஏட்டில்**

கடனுக்கு சொத்துகள் வாங்கியது. **உரிய குறிப்பேட்டில் (குறிப்பாக கொள்முதல் ஏட்டில் பதியப்படுவது இல்லை)**

**39. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.**

1. ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பும், வங்கிஅறிக்கையின் படியான வங்கி இருப்பும் வேறுபட்டிருப்பதற்கான காரணங்களை அடையாளம் காண



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

2. காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை கண்டறிய
3. ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிட

| **40. ஆள்சார் கணக்கு** | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
|---|---|---|
| **சொத்துகணக்கு** | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| **பெயரளவுகணக்கு** | அனைத்து நட்டங்களையும் செலவுகளையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்க. |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. மனோகரின் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| ரொக்க க/கு ப.<br>முதல் க/கு | 60000 | <br>60000 |
| அறைகலன் க/கு ப.<br>ரொக்க க/கு | 10000 | <br>10000 |
| கொள்முதல் க/கு ப.<br>ரொக்க க/கு | 25000 | <br>25000 |
| கொள்முதல் க/கு ப.<br>கமலேஷ் க/கு | 15000 | <br>15000 |
| ரொக்க க/கு ப.<br>விற்பனை க/கு | 28000 | <br>28000 |
| ஹரி க/கு ப.<br>விற்பனை க/கு | 10000 | <br>10000 |
| கமலேஷ் க/கு ப.<br>ரொக்க க/கு | 12000 | <br>12000 |
| வாடகை க/கு ப.<br>ரொக்க க/கு | 500 | <br>500 |
| ரொக்க க/கு ப.<br>ஹரி க/கு | 8000 | <br>8000 |
| எடுப்பு க/கு ப.<br>ரொக்க க/கு | 4000 | <br>4000 |

**41.ஆ. பாசு குறிப்பேட்டுப்பதிவுகள்**

| **நாள்** | **விவரம்** | **பற்று** | **வரவு** |
|---|---|---|---|
| 2018 ஜீன்1 | ரொக்க க/கு ப<br>பாசு முதல் க/கு | 80000 | <br>80000 |
| 4 | அறைகலன்க/கு ப<br>ரொக்க க/கு | 40000 | <br>40000 |
| 7 | இயந்திரம் க/கு ப<br>ஹரீஸ் க/கு | 10000 | <br>10000 |
| 10 | கொள்முதல் க/கு ப<br>ரொக்கம் க/கு | 80000 | <br>80000 |
| 18 | காப்பீட்டு முனைம க/கு ப<br>ரொக்க க/கு | 11000 | <br>11000 |

**பாசுவின் முதல்கணக்கு**

| **நாள்** | **விவரம்** | **தொகை** | **நாள்** | **விவரம்** | **தொகை** |
|---|---|---|---|---|---|
| | | | ஜீன்1 | பாசு மு க/கு | 50000 |

**அறைகலன் கணக்கு**

| **நாள்** | **விவரம்** | **தொகை** | **நாள்** | **விவரம்** | **தொ** |
|---|---|---|---|---|---|
| **17ஜீ4** | **ரொக்கம் க/கு** | **6000** | | | |

**இயந்திரக் கணக்கு**

| **நாள்** | **விவரம்** | **தொகை** | **நாள்** | **விவரம்** | **தொ** |
|---|---|---|---|---|---|
| 17ஜீ7 | ஹரீஸ் க/கு | 1000 | | | |

**ஹரீஸ் முதல்கணக்கு**

| **நாள்** | **விவரம்** | **தொ** | **நாள்** | **விவரம்** | **தொகை** |
|---|---|---|---|---|---|
| | | | ஜீன்17 | இயந்திர க/கு | 10000 |

**கொள்முதல் கணக்கு**

| **நாள்** | **விவரம்** | **தொகை** | **நாள்** | **விவரம்** | **தொ** |
|---|---|---|---|---|---|
| 17ஜீ10 | ரொக்கம் க/கு | 4000 | | | |

**காப்பீட்டு முனைமக் கணக்கு**

| **நாள்** | **விவரம்** | **தொகை** | **நாள்** | **விவரம்** | **தொ** |
|---|---|---|---|---|---|
| 17ஜீ18 | ரொக்கம் க/கு | 100 | | | |

**42.அ. குணால் என்பவரது தனிப்பத்தி ரொக்கஏடு**

| **நாள்** | **பெறுதல்கள்** | **தொ** | **நர்** | **செலுத்தல்க** | **தொ** |
|---|---|---|---|---|---|
| 17ஜ1 | இருப்புகீகொ | 11200 | ஜ7 | வாடகை | 30 |
| 5 | ரமேஷ் | 300 | 10 | மோகன் | 700 |
| 8 | விற்பனை | 300 | 27 | அறைகலன் | 200 |
| | | | 31 | சம்பளம் | 100 |
| | | | **31** | **இருப்பு கீஇ** | **10770** |
| | | **11800** | | | **11800** |
| **மே1** | **இருப்புகீகொ** | **25100** | | | |

**42.ஆ.** ராணியின் ஏடுகளில் கணக்கியல் சமன்பாடு

| **நடவடிக்கை** | **சொத்துக்கள்** | | | | **முதல்** | **வ.கட** |
|---|---|---|---|---|---|---|
| | **ரொக்** | **சரக்** | **அை** | | | **பொறு** |
| தொ.தொட | +80000 | | | | +80000 | |
| **சமன்பாடு** | **+80000** | | | **=** | **+80000** | |
| கடன் கொ | | +10000 | | | | +10000 |
| **சமன்பாடு** | **+80000** | **+10000** | **60000** | **=** | **+80000** | **+10000** |
| ரொ.அ.வா | -6000 | | +6000 | | | |
| **சமன்பாடு** | **+74000** | | **+66000** | **=** | **+80000** | **+10000** |
| க.அ.ரொ | -8000 | | | | | -8000 |
| **சமன்பாடு** | **+66000** | **+10000** | **+6000** | **=** | **+80000** | **+2000** |
| ரொ.கொள் | -2000 | +2000 | | | | |
| **சமன்பாடு** | **+64000** | **+12000** | **+6000** | **=** | **+80000** | **+2000** |
| வா.ரொ.செ | -500 | | | | -500 | |
| **சமன்பாடு** | **+63500** | **+12000** | **+6000** | **=** | **+79500** | **+2000** |

**43.அ. வீணா வங்கி சரிக்கட்டும் பட்டியல்**

| **விவரம்** | **தொகை** | **தொகை** |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று<br>கூட்:- காசோலை புத்தகக் கட்டணம்<br>பாதுகாப்பு பெட்டக வங்கியில் பற்று | <br>200<br>1000 | 10000<br><br>1200 |
| | | **13200** |
| கழி:- செ.காசோ வரவு வைக்கப்படவில்லை<br>வாடிக்கையாளரிடம் நேரடியாக பெற்றது | 11200<br>7000 | <br>**18200** |
| **வங்கி அறிக்கையின்படி சாதகமானஇரு** | | **-5000** |

**43.ஆ. ஆனந்தின் குறிப்பேட்டுப்பதிவுகள்**

| **நாள்** | **விவரம்** | **பற்று** | **வரவு** |
|---|---|---|---|
| 2018 ஜன 1 | ரொக்க க/கு ப<br>ஆனந்த் முதல் க/கு | 70000 | <br>70000 |
| 2 | கொள்முதல்க/கு ப<br>X க/கு | 30000 | <br>30000 |
| 3 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு | 40000 | <br>40000 |
| 4 | கட்டடம் க/கு ப<br>L க/கு | 95000 | <br>95000 |
| 5 | ரொக்க க/கு ப<br>வங்கி க/கு | 5000 | <br>5000 |
| 6 | எடுப்பு க/கு ப<br>வங்கி க/கு | 4000 | <br>4000 |
| 7 | அறக்கொடைக/கு ப<br>கொள்முதல் க/கு | 3000 | <br>3000 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 8 | எடுப்பு க/கு ப<br>கொள்முதல் க/கு | 12000 | 12000 |
| 9 | விற்பனை மேம் செலவு க/கு ப<br>கொள்முதல் க/கு | 3000 | 3000 |
| 10 | அலுவலகசெலவுகள் க/கு ப<br>கொள்முதல் க/கு | 200 | 200 |

**44.அ.** **ஆளத்த் கணக்கு**

| நாள் | விவ்ரம் | தொ | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| 17ஜீ | ரொ க/கு | 2000 | 1 3 | ரொ க/கு | 4000 |
| 20 | ரொ க/கு | 4000 | ஜ12 | கொள்க/கு | 8000 |
| | **இருப்பு** | **11000** | 25 | கொள்க/கு | 5000 |
| | **கீ/இ** | **17000** | | | **17000** |
| | | **52000** | டிச | **இருப்புகீ/கொ** | **11000** |

**44.ஆ.** **சந்தோஷ் கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 | **பிரசாத்** | | |
| ஏப்1 | 100மீ சில்க் துணி 1மீ450 வீ100 | 45000 | |
| | 75மீ வெல்வெட்துணி 1மீ 180வீ | 13500 | 58500 |
| **20** | **ஹரிராம்** | | |
| | 50கட்டுகள் காடாத்துணி 1 730 | 36500 | |
| | 80 கட்டுகள் காலிக்கோ 1மீ650 | 52000 | **8850** |
| | **கொள்முதல்** | | **147000** |

**சந்தோஷ் விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 | **ரத்தினம்** | | |
| ஏப்10 | 60மீ சில்க்துணி 1மீ 490 60 | 29400 | |
| | 50மீ வெல்வெட்துணி, 1மீ 210வீ | 10500 | 39900 |
| **18** | **நாதன் நிறுவனம்** | | |
| | 100 மீ சில்க் துணி 1மீ 510வீ | | 51000 |
| | **விற்பனை** | | **90900** |

**45.அ.** **பாபு என்பவரின் இருப்பாய்வு**

| வஎ | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 1 | கைரொக்கம் | 7000 | |
| 2 | கடனாளிகள் | 5400 | |
| 3 | சம்பளம் | 6800 | |
| 4 | வாராக்கடன் | 200 | |
| 5 | தொடக்கசரக்கிருப்பு | 15400 | |
| 6 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7000 | |
| 7 | கடனீந்தோர் | | 11800 |
| 8 | முதல் | | 25000 |
| 9 | கொள்முதல் | 45000 | |
| 10 | விற்பனை | | 50000 |
| | **மொத்தம்** | **86800** | **86800** |

**45.ஆ, துரைராஜ் என்பவரின் முப்பத்தி ரொக்கஏடு**

| நா | பெறு | பே | ரொ | வங் | நா | செலு | பே | ரொ | வங் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம1 | இருகீபெ | | 12000 | 15000 | 2 | வங் | | 11000 | |
| 2 | ரொக்க | எ | | 11000 | 12 | வங் | எ | 6900 | |
| 3 | விற்பனை | | 9250 | 9250 | 14 | கொ | | | 8500 |
| 8 | ஜெய | | 6900 | | 20 | எடுப் | | 3000 | 5000 |
| 12 | ரொக்க | எ | | 6900 | 25 | விபே | எ | | 1850 |
| 19 | கண்ண | | 1975 | | **31** | **கீஇ** | | **9225** | **26800** |
| | | | **30125** | **42150** | | | | **30125** | **42150** |
| ஏ1 | **இகீகெ** | | **9225** | **26800** | | | | | |

**46.அ.** **விஜய் பொருள் கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 | முகில் | | 12480 |
| பிப்1 | முகில் | | 15200 |
| | **கொள்முதல்** | | **27680** |

**விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| பிப்4 | சச்சின் | | 15000 |
| 6 | மணிஷ் | | 12100 |
| 10 | மணிஷ்' | | 13300 |
| | **விற்பனை** | | **40400** |

**கொள்முதல் திருப்ப ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| பிப்9 | முகில் | | 1500 |
| | **கொள்முதல் திருப்ப ஏடு** | | **1500** |

**விற்பனை திருப்ப ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| பிப்7 | சச்சின் நிறுவனம் | | 1200 |
| | **விற்பனை திருப்ப ஏடு** | | **1200** |

**46.ஆ.** **பாகுபடுத்தப்பட்ட சில்லரை ரொக்க ஏடு**

| பெ.பெ | நா | விவரம் | தொ | பய | வ | அ | கூ | எழு | பல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2000 | 1 | ரொக் | | | | | | | |
| | 7 | மடல் | 100 | | | | 100 | | |
| | 8 | வெள் | 50 | | | | 50 | | |
| | 10 | ஆட் | 200 | | 200 | | | | |
| | 15 | கூலி | 300 | | 300 | | | | |
| | 18 | தபா | 100 | 100 | | | | | |
| | 21 | எழுது | 450 | | | | 450 | | |
| | 23 | தேநீ | 60 | | | 60 | | | |
| | 25 | துரித | 150 | 150 | | | | | |
| | 27 | சிற்று | 250 | | | 250 | | | |
| | 31 | ஏற்றி | 150 | | 150 | | | | |
| | | **மொத்** | **1810** | **250** | **650** | **310** | **600** | | |
| | 31 | **இகீஇ** | **190** | | | | | | |
| 2000 | | | **2000** | | | | | | |
| 10 | 1 | இகீபெ | | | | | | | |
| 1810 | | ரொக் | | | | | | | |

**47.அ.** **ஆனந்த் என்பவரின் இருபத்தி ரொக்கஏடு**

| நா | பெறுதல்க | தொகை | | நா | செலுத்த | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | த | ரொக் | | | த | ரொக் |
| 1 | இருப்புகீகெ | | 19500 | 15 | மின்கட்ட | | 12500 |
| 4 | விற்பனை | | 32000 | 17 | கணிப்பெ | | 16800 |
| 9 | கோபு | 200 | 11800 | 25 | காந்தி | 300 | 19700 |
| 28 | திருவேங்க | 100 | 8900 | 30 | வி.செலவு | | 3500 |
| | | | | **31** | **இருப்கீஇ** | | **19700** |
| | | 300 | **72200** | | | | **72200** |
| **ஜ** | **இருப்புகீகெ** | | **19700** | | | | |

**47.ஆ. வங்கிச் சரிகட்டும் பட்டியல்**

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு<br>கூட்:- விடுத்த காசோ முன்னிலை ப.விலன் | | 300<br>1000 |
| | | **1300** |
| கழி:- வைப்பு கா.வசூலித்த வரவு வைக்கபட<br>வங்கியால் பிடித்தம் செய்த வட்டி<br>வங்கி செலுத்திய வாடகை | 500<br>100<br>200 | **800** |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | **500** |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com